ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம்

* 404 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொன்னேரி வட்டம், புதுவாயல்-பெரியபாளையம் நெடுஞ் சாலையுடன் புதுப்பாளையம் கிராமத்தை இணைக்க, ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம் (Road Dam) கட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இது சாதாரணமான தரைப்பாலம். இதற்கு ஏறக்குறைய 4 அல்லது 5 லட்சம் ரூபாய் ஆகும் என்ற காரணத்தால் பொதுப்பணித் துறைக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறோம். கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், பொதுப்பணித் துறை விரைவில் இதைக் கட்டிக் கொடுக்குமாறு பரிந்துரை செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைக் கட்டுவதற்குத் தோராயமாக 8¼ லட்சம் ரூபாய் ஆகும் என்று தலைமைப் பொறியாளர் கூறியிருக்கிறார். 1971-72-ம் திட்டத்தில் இதைச் சேர்க்க வேண்டுமென்றால், அதற்கு நிதிநிலைமை இடம் தராததால் இது தள்ளி வைக்கப்பட்டது. இதா வேலைகளின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை 190 லட்சம் ரூபாய். நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை முதல் மூன்று ஆண்டுகளிலேயே செலவழிக்கப்பட்டுவிட்டது. அடுத்த திட்ட சூழ்நிலையில்தான் இது ஏற்றுக்கொள்ளப்படும். இப்போது இருக்கிற நிதிநிலைமை சீராக இல்லை. நிதிநிலைமை சீர்பட்ட பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Encroachment in Singampuneri

* 405 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that evictions are taking place in Singampuneri by orders of the Commissioner of Panchayat Union.

(b) whether it is a fact that a protest meeting was held on 2nd September 1971 and representation sent; and

(c) the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். சிங்கம் புனரி பேரூராட்சியைச் சேர்ந்த நில அளவை எண் 564/8-ல் உள்ள நிலத்தில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு ஒன்று, 28—8—1971-ல் பேரூராட்சி நிர்வாக அதிகாரியால் அகற்றப்பட்டது.